www.tamilarangam.net

# மதம் மாறுவோரும் மாற்றுவோரும் இதனால் மனிததுன்பங்கள் தீருமா?

மக்களே!

நாம் ஏன் சிரிக்க மறந்தோம்? ஏன் சிந்திக்கமறந்தோம்? எம் மகிழ்ச்சியையும் துணிவையும் திருடியவர்கள் யார்? பொன் வந்தது, பொருள் வந்தது ,வேலையும் நகையும்நட்டும் சகதைும் வந்தன. ஆனாலும்! ஆனாலும்!!எதையோ இழந்த துயரம் மனக்குறையைக் காவும் மனிதர்களாய் நாம் சஞ்சலம் கொள்வதேன்? ஒவ்வொருவரும் நெஞ்சில் ஒரு விமலையைத் தாங்கித்திரிவதேன்? காரணம் என்ன? எமக்கு அன்னியமான கலாச்சாரம் வந்து மோதியது எம் ஊர் போல கலந்து பேசிச் சிரித்து பங்கிட்டு வாழ முடியவில்லை. ஓடியாடித்திரிந்த மண்ணின் நினைவுகள் இளமைக்காலத்துடிப்பு மிக்க வாழ்வின் எண்ணச் சிதறல்கள், பெற்றவர் வளர்த்தவர் , உற்றோர் உறவுகள் அருகில்லையே என்ற ஏக்கம் சூழ்ந்தது . எதைச் சாப்பிட்டாலும் ருசிக்கவில்லை . என்னத்தை வாங்கிக் குவித்தாலும் நிறைவில்லை என்று மனக்குறை தொடர்ந்தது. நண்பர் கூட்டம் என்பன வெறுக்கத்தக்கதாகிவிட்டது. கடும் உழைப்பு கண்துஞ்சா வேலை. முதலாளிக்கு அடிமைத்தனமான விசுவாசம். Chef என்னைக் கேட்டுத்தான் எதுவும் செய்வான் நான் இல்லாவிட்டால் ஒன்றுமே நடக்காது என எம்முள்ளேயே மனக்கணக்குகள், கறுப்பனாய் கருதி வெள்ளைத் திமிர் காட்டினாலும் கோபம் வந்தால் பேசுவான் மற்றபடி நல்ல Chef என்று நற்சான்றுகள். பல்லைக் காட்டிப் பணிந்து மனதுள்ளே வெந்தாலும் வெளியே சிரித்து வாழும் அவலம். Ausländer ஆய் Schwarze ஆய் பழிக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டாலும், பாஸ்போட் கிடைத்தாலும், நல்ல விசா கிடைத்தாலும் Ausländer என்ற வசை போகவில்லை.

இந்த பல்வகைக் கதம்பவாழ்வு அதன் மிசின்வாழ்வு,விரத்தி பயம், வெறுப்பு, கோபம், யாவும் கொண்டுவந்தது. குடும்பங்கள் கலகம் நிறைந்தவையாயின. புருசனும் மனிசியும் எட்டிக்குப் போட்டியாயினர். மனிசி சொல்வழிகேட்கிறாள் இல்லை அடங்காப்பிடாரியாகிவிட்டாள் என்று பலர் சோகம் சிந்தினார்கள் முந்தி வந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைத்த கதையாய் தமக்கு தாய்தந்தையரை விட Deutsch அதிகம் தெரியும், நாகரீகம் புரியும் என்ற நிலையில் பிள்ளைகள்.

இந்தநிலையில் குடும்பங்களில் அமைதியின்மையும் வெறுப்பும் தோன்றுவது இயற்கை. மனிதர்களை வெறுக்கும் நிலை வருவதும் புதுமையல்ல. இன்றைய இயந்திர வாழ்வுக்குள் மூழ்காமல் தொடர்ந்தும் உப்புச் சப்பற்ற, எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்த கதையாக இல்லாமல் எம் பார்வையை அகலப்படுத்த வேண்டும். வாழும் நாட்டின் மொழியை, மக்களை மற்றைய இனங்களை, மனிதர்களை, சமூகத்தை, கலைகளை கற்க, அறிய ஆவல் வேண்டும். மற்ற மனிதர்களோடு கலக்கும் போதும், புதிய விடயங்களைக் கற்கும் போதும் உலகம் பரந்ததாகும். அறிவியல் நெருக்கும், தேடல் அதிகமாகும். நாம் தனிமைப்படல் குறையும். எம் வாழ்வுச்சிறையை விட்டு வெளியே வரும் போதும், ஒரே வட்டத்துள் தவண்டை அடிக்காமல் வெளியே உலவும் போதும் நாம் பரந்து விடுகின்றோம்.

இதுவே உண்மை நிலையாய் இருக்கையில் ஜகோவா, கத்தோலிக்கம், பைபிள், கிறிஸ்து, பிரார்த்தனை என்று தவிச்ச முயல் அடிக்க நாளுக்கொரு புதிய கோலங்களோடு கடவுளின் பூலோகப்பிரதிநிதிகள் தமிழ் மக்களிடம் படை எடுக்கின்றார்கள். உன் சமயம் பிழை, என் சமயம் சரி, தேவன் வருகின்றார், செய்தி வருகிறது, ஒளி வருகின்றது, ஒலி வருகின்றது என்ற வாசகங்களோடு அடிக்கடி கிறிஸ்துவின் தூதர்கள் வருகின்றார்கள். பிதாவையும் தேவனையும் போதனை செய்தபடி உலாவும் இவர்கள் யார்? இவர்கள் நோக்கமென்ன? தமிழ் மக்களையும், வெளிநாட்டவரையும் மட்டுமே சுற்றி வட்டமடிப்பது ஏன்? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்ற கதையாய் ஐரோப்பியர்களிடம் போகமுடியாதபடியால் எம்மைச் சுற்றுகிறார்களா? 62% ஜேர்மனியர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்கிறது ஒருமதிப்பிடு வருடாவருடம் தேவாலயத்துக்கு வரிகட்டமறுத்து ஆயிரக் கணக்கானோர் வெளியேறுகின்றர்கள். கிறிஸ்தவ அமைப்புகட்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று ஒப்பாரி எழுகின்றது. ஆனால் இவர்கள் எங்கள் சனங்கள் நடுவில் சமயத்தை இழுத்து வருவது எத்தகைய விளைவைத் தரும் நாம் இரட்சிக்கப்படும் சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நாம் இன்று மனதளவில் சீரழிந்து இருப்பதைவிட மோசமாகி மனநோய் வரை இழுபடும் அபாயம் உருவாகியுள்ளது.

அறிவுரீதியாக மனித நாகரீகம் மெச்சக் கூடிய உயர்ந்த சிந்தனைகள் ஏதாவது இவர்களிடம் உண்டா? என்று கொஞ்சம் தூசு தட்டி விசாரித்தால் இவர்கள் இன்றைய அறிவியல் உலகிற்குப் பொருத்தமற்ற பைபிள் வாசகங்களை வெறுமனே உருப்போடும் கிளிப்பிள்ளைகள் என்பது விளங்கும். எம் பிரச்சனைகளின் காரணகாரியங்களை கிண்டிக்கிளறி அரசியல் ரீதியில் உணரவும், பொருளாதார ரீதியில் புரிந்து கொள்ளவும் ஞானமற்ற இவர்கள் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முனைகின்றார்கள். இங்குள்ள வாழ்வியல் முறையுள் ஒரு வெளிநாட்டான் அவற்றை எதிர்கொள்ள விளங்க வேண்டும் என்ற போதனை பெறவேண்டிய சமயத்தில் இவர்கள் நன்மையையும், தீமையையும் கடவுளிடம் ஒப்படைத்து விடு என்று போதனை செய்வது வாழும் நிஜ உலகையும், சூழலையும் விளங்க மறுத்த மூடத்தனத்தின் விளைவே. துன்பப்படும் மனிதர்கட்கு உதவுவதாக சொல்லிக் கொண்டு இங்குள்ள வாழ்வுச் சிக்கலுள் வீழ்ந்து கரையேற முடியாமல் உழலும் மனிதனை இவர்கள் மனநோயாளியாக்கி விடுகின்றார்கள். இங்கு வந்த பின்பு கிறிஸ்துவமதம், ஜகோவா போன்ற அமைப்புகட்கு மாறியவர்களான தமிழர்கள் தனியாகவும் குடும்பமாகவும் மற்றையவர்களையும் மதமாற்ற வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதில் பலர் தாம் சேர்ந்த கிறிஸ்தவ அமைப்புகள் மூலம் தொழில், சமூகஉதவி, வெள்ளை மனிதர் உறவு, சொந்த இலாபம் போன்றவர்கட்கு சேர்ந்தவர்கள் என்பதை நம்ப நிரம்ப நியாயமுண்டு. பாரம்பரியமாக இலங்கையில் கிறிஸ்தவர்களாக இருந்து இங்கு வந்து அதைத் தொடர்பவர்கள் பற்றி ஒன்றும் சொல்ல முடியாவிட்டாலும் இங்கு வந்து மதம் மாறியவர்களின் செயலை நேர்மையான வழியில் நியாயப்படுத்த முடியாது. நாம் எந்தச் சமயத்தையும் சரியென்று கொள்ளவில்லை. சகல சமயமும் கடவுளின் பேரால் மனித இரத்தம் குடித்தவைதான். சரித்திரம் அதற்கு சாட்சியாகவுள்ளது. இந்துவோ, இஸ்லாமோ, கிறிஸ்தமோ, பௌத்தமோ மனிதர்கள் தாம் விரும்புவதை நம்பிவிட்டுப் போகட்டும்,பின்பற்றட்டும். ஆனால் இங்கு அதிதீவிரமான சமயவாதமும் வெறித்தனமான கடவுள் பற்றிய புலம்பலும் மனநோய் மட்டத்திற்கு வளர்வதுதான் பிரச்சனை. இந்தக் கிறிஸ்தவ அமைப்புகளில் இணைந்தவர்கள் பலர் தம் சுயத்தை இழந்து மனநோயாளிகளாக உள்ளமை பரிதாபமான சங்கதியாகிவிட்டது.

இந்த சமயக் கூத்தை வெறும் மண்டை கழண்டவர்களின் பிதற்றல் என ஒதுக்கி விடமுடியாது. ஏனெனில் பல வெளிநாட்டவர்கள், தமிழர்கள் மனநோயாளிகளாக குடியில் தஞ்சம் புகுந்தவர்களாக ஆகி வருகையில் இவர்களின் பிதா, சுதன், பரிசுத்த ஆவி, சாத்தான், தீய ஆவி என்ற இரண்டாயிரமாண்டு காலப் பழைய சமயக் கருத்துக்களை மேளதாளத்துடன் அறிமுகப்படுத்துகின்றார்கள். பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாய் ஐரோப்பிய சமூக அமைப்பில் நொந்து கெட்டுப் போய் இருப்பவர்களை இவர்கள் சதா நேரமும் கிறிஸ்து, தேவன் எனப் புலம்பும் மனநோயாளிகளாக ஆக்கியுள்ளமைக்கு ஐரோப்பிய நாடெங்கும் தமிழர்களிடையே பல்வேறு உதாரணங்கள் உண்டு. சோர்வு, அதீத உணர்ச்சி, வழமைக்கு மிஞ்சிய நடவடிக்கைகள் அழுதல் என்பன உட்பட பலவகை மனநோய்கட்கு இவர்கள் ஆட்பட்டுள்ளனர். குடும்பங்கள் மேலும் உடைந்து சீரழிவுகளும், பிரிவுகளும் தொடங்கியுள்ளன. எனவே வெளிநாட்டுத் தமிழர்கள் இப்படியான கிறிஸ்தவ அமைப்பின் ஆள்பிடிக்கும் நபர்களையிட்டு மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இது மிகவும் ஆபத்தானதாக மாறிவருவதையும், அறிவுத் தற்கொலைக்கு இட்டுச்செல்வதையும் தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தலைசிறந்த சைவப்பழமாய் திருநீற்றுப்பட்டை, சந்தனப் பொட்டு, கோவில், குளம், பில்லி, சூனியம் செய்வினை என்று திரிந்தவர்கள் இங்கு பரமண்டலங்களில் இருக்கின்ற எங்கள் பிதாவே என்று துதி பாடத் தொடங்கியுள்ளனர். ஒரு தனிமனிதன் தன் விருப்பிற்கேற்ப சமயம் மாறுவது ஒருவனின் தனிப்பட்ட விடயமாகும். ஆனால், இங்கு மாறாக நிர்ப்பந்தம் செலுத்தப்படுகின்றது. சிலர் தொல்லை என்று கருதி கதவு திறக்கவும், ஓடி ஒழிக்கவும் கூடக்காரணமாக இருக்கின்றது. வேற்றுச் சமய நம்பிக்கையாளர்கள் என்று தெரிந்தும் பைபிளைப் படிக்கும்படி வற்புறுத்தப் படுகின்றார்கள்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்று தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளில் கோவில் கட்டினார்கள். சாத்திரம் விதிமுறைகள் யாவுக்கும் மாறாய் நிலவறைகளில் கடவுளை பயமுறுத்திக் குந்தவைத்தனர். எம் ஊர் வழக்கப்படி அடிபுடி, கோஷ்டிகள், கோடு, கச்சேரி, பணமோசடி, என்று ஐரோப்பிய நாடுகளிலும் தமிழரின் சாதனை நீளுகின்றது. இன்னொருபகுதி சாயிபாபா, தாடிச்சாமி, பாலயோகி என்று கோயிலைச்சாட்டி இலுப்பறிப்படுகின்றர்கள். பிள்ளையார் பால்குடிக்கின்றர் என்று இந்தியாவில் கிளப்பி விடப்பட்ட வதந்தியை நம்பி இங்கு பிள்ளையாருக்கு பால்பருக்கத் திரண்டனர் ஒருபகுதியினர். ஐரோப்பியப் பத்திரிகைகட்கு எம் மூடத்தனத்தை நையாண்டி பண்ண வாய்ப்புக்கிடைத்தது. உயிருள்ளவை மட்டுமே குடிக்கவும் உண்ணவும் முடியும் என்ற நாளாந்தம் காணும் சராசரி உண்மையை நாம் எவ்வாறு கண்டு கொள்ளாமல் போனோம். நாம் வாழும் நாடுகளில் எம்மைப்போன்றமக்களுக்குள்ள எதிர்காலப்பிரச்சனைகளை கண்டுகொள்ளாமல் விடமுடியுமா? நிகழ்காலத்தில் நடக்கும் மனிதவிரோதங்களை காணாமல் கண்மூடி இருக்க முடியுமா?

ஜேர்மனியில் வெளிநாட்டவர்கள் தாக்கப்படுவது தினசரி நிகழ்ச்சியாககவிட்டது.அரசின் மதிப்பீட்டின் படி ஜேர்மனியில் 42,000 புதிய நாசிகள் நிலைமைப்பட்டுள்ளனர் 1996 இல் 624 வெளிநாட்ட வருக்கு எதிரான வன்முறை நிகழ்ச்சிகளும் 1997இல் இது 791 (+27%) ஆகஅதிகரித்துள்ளது . 1996 ஜனவரி இல் ஜேர்மனியின் Lübecker–நகரில் (Hafen streße) தூங்கிக் கொண்டிருந்த வெளிநாட்டவர்கள் மீது வீட்டோடு சேர்த்து நாசிகள் தீமூட்டியதில் 10பேர் மரணித்ததுடன் 38பேர் காயமடைந்தனர். நாசிகள் தான் செய்தனர் என்று கண்டுபிடிக்க அரசுக்கு 2வருடம் சென்றது . இலங்கையில்
சிங்களப் பெருந்தேசிய வாதத்துக்கு அஞ்சிஓடிவந்தவர்கள் முன்பு ஜேர்மனிய பாசிசம் நிர்வாணமாய் நிற்கின்றது எனவே அரசியல் கற்போம் என்று பிடிவாதம் பிடியாமல் வாழும் நாட்டின் சமூகத்தை அறிதல் அவசியம் . ஆசியன், ஆபிரிக்கர், ஐரோப்பியர், லத்தின் அமெரிக்கர் என்ற பேதமின்றி மனிதனை மனிதர் போற்றும் கறுப்பு , வெள்ளை பாராட்டாத ஒரு மனித சமூகம உருவாக நடக்கும் உலகளாவிய போராட்டத்தில் எம் காலடிகளை எதிர்பார்த்து வரலாறு காத்திருக்கின்றது. காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா என்ற சன்னியாசித் தனத்துள் விழாமல் துணிந்து வாழ்வை எதிர் கொள்ளும் உறுதி மிக்க அறிவியல் சிந்தனை கொண்ட புதிய மனிதர்கள் இன்று நமக்குத்தேவை. இந்தக் கிறிஸ்தவ சமயவாத வெறிச் சிந்தனையாளர்கள் அம்பலப்படுத்தப்பட்டு துரத்தப்பட வேண்டியவர்கள். மனிதனிடமுள்ள நம்பிக்கையும், துணிவையும், தேடலையும் அழித்து அவனை சிந்தனைக் குருடாக்கும் பலவித வேடங்கள் தாங்கும் மதஅமைப்பு களையிட்டு எச்சரிக் கையாயிருங்கள். வளர்ச்சி பெற்ற நாகரீகமான சிந்தனைகளை உள்வாங்கி மற்றைய சமூகங்கள் போல் நாமும் முன்னேறுவோம் புதியதோர்யுகத்தை அமைப்போம்!

புதிய யுக வட்டம் ஜேர்மனி

19,05,1998

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்